# கலைஞரும் நானும்

## 88

**“இந்த வாழ்க்கை கலைஞர் அளித்தது. எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்துள்ள நான், புகைப்படத் துறையில் இன்று வந்துள்ள இடம், கலைஞர் அளித்தது. அவரைப் படம் எடுக்கச் சென்றுபோதுதான் என் வாழ்க்கையே மாறியது” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார்**

**புகைப்படக் கலைஞர் எஸ்.டி.சுப்பு.**





கலைஞருடன் சுப்பு



# “அவரின் வாழ்த்தும் வாய்ப்பும் வழிநடத்தும்!”

**எஸ்.டி.சுப்பு, புகைப்படக் கலைஞர்**

*1980-ஆம் ஆண்டு வாக்கில்தான் முதன்முதலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நேரில் பார்த்தேன். அப்போது நான், கோவையிலிருந்து பத்திரிகைகளுக்குப் புகைப்படக் கலைஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். ஒருங்கிணைந்த கோவை மாவட்ட நிகழ்ச்சிகளுக்கு கலைஞர் வந்தால், அங்கு தவறாமல் சென்றுவிடுவேன். பல பத்திரிகைகளுக்குப் புகைப்படங்கள் அனுப்பி வந்தேன். எவ்வளவு கூட்டமாக இருந்தாலும், யார் யார் வந்திருக்கின்றனர் என தலைவர் நோட்டமிட்டுவிடுவார். அதுபோல, புகைப்படக் கலைஞர்களுக்கு என்ன மாதிரியான படங்கள் தேவைப்படும் என்பதை அறிந்தவர் என்பதால், அதற்கேற்ப நேரம் கொடுப்பார்.*

*சில தலைவர்களிடம் சில நேரங்களில் ‘மீண்டும் ஒருமுறை’ எனக் கேட்க முடியாது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்களிடம் மறுமுறை கேட்டால், அதே புன்னகையுடன் ஒத்துழைப்பார்.*

*நான் எடுக்கும் புகைப்படங்களை ரசித்த தலைவர் அவர்கள், கட்சி நிகழ்ச்சிகளுக்கும் என்னைப் புகைப்படம் எடுக்கப் பரிந்துரை செய்துள்ளார். இளைஞர் அணித் தொடக்கக் காலத்தில், தளபதி அவர்கள் கோவை வந்தால், அவர்கூடவே இருந்து புகைப்படங்கள் எடுப்பேன். இப்படி, எனது புகைப்படத் தொழில் ‘தலைவர்’, ‘தளபதி’ என்பதாகவே இருந்தது. ‘இந்தியா டுடே’ இதழுக்காக கலைஞர் அய்யா அவர்களுடன் ஒருநாள் இருந்து பிரத்யேகப் புகைப்படங்கள் எடுத்திருக்கிறேன், இப்படிப் பல நீங்காத நினைவுகள் உள்ளன.*

### மறக்க முடியுமா?

*‘கோவை சுப்பு’ என்றும், ‘புகைப்படக் கலைஞர் சுப்பு’ என்றும் எனக்கு அடைமொழி அளித்து, மரியாதையுடன் விளித்தவர் முத்தமிழறிஞர் அவர்கள். 2003-ஆம் ஆண்டில், குமுதம் இதழில் ‘மறக்க முடியுமா?’ எனக் குறுந்தொடர் எழுதினார். அந்தத் தொடரின் முதல் கட்டுரையில், நான் அவருக்கு எழுதிய கடிதத்தை முழுவதுமாக குறிப்பிட்டு எழுதினார். அந்தக் கடிதம் மாறன் அவர்களின் கோவை, வால்பாறைப் பயணத்தில், அவருடன் இருந்து புகைப்படம் எடுத்த அனுபவத்தினை, அவர் மறைந்தபோது கலைஞருக்குக் கடிதமாக எழுதி இருந்தேன். அந்தக் கடிதத்தில், தனது கட்டுரையில் எனது பெயர் குறிப்பிட்டு கலைஞர் எழுதியது எனக்குக் கிடைத்த வாழ்நாள் மகிழ்ச்சியாக அமைந்தது. அதுமட்டுமல்ல, என்னைப் பற்றி எழுதிய கட்டுரையை, எனது கவனத்துக்கு கொண்டு வருவதற்கு, அண்ணன் சண்முகநாதன் வழியாகச் சொல்லி விட்டார். தலைவராக மட்டுமல்ல, பத்திரிகையாளராகவும் தலைவர் உயர்ந்து நின்றார்.*

### திரும்ப போஸ் கொடுக்க முடியுமா?

*‘தொல்காப்பியப் பூங்கா’ நூல் வெளியீட்டு விழாவில், நான் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது, திடீரென கலைஞர் மயக்கமடைந்துவிட்டார். மருத்துவமனை கொண்டு செல்வதற்காக அவரை நாற்காலியில் தூக்கிக் கொண்டு சென்றனர். அந்தச் சூழலை படம் எடுக்க நெருங்கியபோது, அதை எடுக்கக் கூடாது எனது கட்சியினர் தடுத்து விட்டனர். அடுத்த நாள் ஒரு நிகழ்ச்சியில், கலைஞருடன் அண்ணன் துரைமுருகன், அண்ணன் பொன்முடி எல்லாம் இருந்தநேரத்தில், “நேற்று உங்களைத் தூக்கிக் கொண்டு சென்றபோது, சுப்பு படம் எடுத்தான்” என கலைஞரிடம் கூறினார் அண்ணன் துரைமுருகன்.*

*தலைவர் அழைத்து, “அந்தப் படத்தையெல்லாம் காட்டுய்யா”என்றார். நான் படம் எடுக்கவில்லை அய்யா, கட்சியினர் தடுத்து விட்டனர் எனக் கூறியதும், “அந்த மாதிரி படத்தை, இப்ப எடுக்க முடியுமாய்யா? சேர்ல வெச்சு தூக்கச் சொல்ல முடியுமா? திரும்ப எடுக்க முடியாதுல்ல?” என்றதும் அந்த இடமே கலகலப்பாக இருந்தது. “உன் வேலை படம் எடுக்கிறது, அடியே வாங்கியிருந்தாலும், நீ படம் எடுத்திருந்தா, உன் படம் பேசப்பட்டிருக்கும்ல” என்றார்.*

### சிறிய வயதில் பவர்

*நான் அதிக வெளிச்சங்களைப் பார்ப்பதால், கண்களுக்கு கருப்புக் கண்ணாடி அணிந்திருந்தேன் அப்போது புகைப்படம் எடுப்பதற்காக கோபாலபுரம் சென்றிருந்தேன். என்னைப் பார்த்தவர், “என்னய்யா? எனக்குப் போட்டியாக கண்ணாடி போட்டு வந்திருக்க?” எனக் கேட்டார். “இல்லீங்கய்யா இது பவர் கிளாஸ்” என்றேன். “வயசு என்னய்யா”எனக் கேட்டார். 31 என்றேன், உடனே, “உனக்கு 31 வயசிலேயே பவர் வந்திருச்சி, எனக்கு 44 வயதில்தான் பவர் வந்தது” என்றார். சண்முகநாதன் அய்யா சிரித்துக் கொண்டே, ‘அய்யாவுக்கு பதவி வந்ததைச் சொல்றாங்க’ என விளக்கினார். இப்படியெல்லாம் தலைவர் டைமிங்காக சொல்வார்.*

**“உன் வேலை படம் எடுக்கிறது, அடியே வாங்கியிருந்தாலும், நீ படம் எடுத்திருந்தா, உன் படம் பேசப்பட்டிருக்கும்ல” என்றார்.**

*இளைஞர் அணிக் கூட்டங்கள், கலைஞர், தளபதி அவர்கள் கலந்துகொள்ளும் கட்சி நிகழ்ச்சிகள் என்றால், படம் எடுத்து ஆல்பமாக தலைவரிடம் சேர்த்து விடுவேன். கோபாலபுரம் வீடு, சி.ஐ.டி. நகர் வீடு எனத் தலைவரைப் பல நேரங்களில் எடுத்த புகைப்படங்களை ஆல்பமாக அவரிடம் கொடுத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் ரசித்துப் பார்ப்பார். கோவையில் நடைபெற்ற மண்டல மாநாட்டின் போது, “தலைவர் எனக்கு பொன்னாடை போர்த்தி மோதிரம் அணிவித்தார். முரசொலியில் அவர் எழுதிய கடிதங்களில் என்னைப் பற்றி மூன்று முறை குறிப்பிட்டு, எழுதி இருக்கிறார். இதையெல்லாம் நினைத்தால், அவர் நினைவுகளில் நான் இருந்திருக்கிறேன் என நினைக்கும்போது மகிழ்ச்சியும் அழுகையும் வரும்.*

### என்னைய படம் எடுக்கமாட்டியா?

*நான் தளபதி அவர்களின் நிகழ்ச்சிகளை அதிகமாக படம் எடுப்பேன். ஒருநாள், அதுபற்றி கேட்ட கலைஞர் அவர்கள், “என்னய்யா… உங்க தளபதியவே படம் எடுத்துகிட்டு இருக்க, என்ன வந்து எடுக்க மாட்டியா?” எனக் கேட்டார். அந்த அன்பை எல்லாம் நினைத்தால், இப்போது என்னால் இயல்பாக இருக்க முடியாது. அப்போதுதான், அவர் பேன்ட் போட்டிருக்கும் சில புகைப் படங்களை எடுத்தேன்.*

*ஒருமுறை கோவை நிகழ்ச்சிக்காக, புகைப்படம் எடுக்கச் சென்றபோது, அங்கிருந்த கழக நண்பர்கள், நான் ஒரு பத்திரிகை ஐ.டி. கார்டு வைத்திருந்ததைக் குறிப்பிட்டு, “புகைப்படம் எடுக்க வேண்டாம்” எனத் தடுத்தனர். தலைவர் அதைப் பார்த்து, “மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு”னு அண்ணா சொல்லிருக்காருய்யா, அவரை விடுங்க, நம்மளதான படம் எடுக்க வர்றாரு” என அனுமதிக்க வைத்தார்.*

*எனது பதினைந்து வயதில் கேமரா எடுத்தேன். அப்போதுதான் கலைஞர் அவர்களைப் படம் எடுக்கும் வாய்ப்பு அமைந்தது. ஒருசில நிகழ்ச்சிகளுக்குப் பின் என்னைப் பார்த்தவர் அழைத்து, ஏன் படிக்கப் போகலயா? எனக் கேட்டார். “இல்லீங்கய்யா, எட்டாம் வகுப்பு வரைதான் படித்தேன், படம் எடுக்க வந்துட்டேன்” என்றேன். “நல்லா எடு, நல்ல பெயர் வாங்கணும்” என வாழ்த்தினார். அந்த வாழ்த்துதான் என்னை வளர்த்தது.*

*அவர் அளித்த வாய்ப்புகள்தான் என்னைப் புகைப்படக் கலைஞராக உயர வைத்தது. இன்று, கலைஞர் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் , கலைஞரின் புகைப்படக் கண்காட்சியை நடத்துவதற்கான வாய்ப்பு அவருக்கு நான் அளிக்கும் சிறு மரியாதை எனலாம். கலைஞர் இல்லையென்றால், நான் இல்லை, என்னுடைய வளர்ச்சிக்கு அவர்தான் காரணம்.*

**தொகுப்பு :**
**நீரை மகேந்திரன்**

*....பகிர்வார்கள்*

## உச்சநீதிமன்றம் வைத்த குட்டு!


இந்தியாவின் வகுப்புவாத மதவெறியர்கள், இந்திய முஸ்லிம்களைப் பார்த்து “பாகிஸ்தானுக்குப் போ” என்பது மதவெறி அடாவடித்தனத்தின் உச்சத்தை, மதச்சார்பின்மை பேசும் அனைவருமே எதிர்த்து வருவதுதான். சட்டமும், நீதியும் அனைவருக்கும் சமம் என்பதை வலியுறுத்துவது மட்டுமல்ல, அனைத்து சமூக மக்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதுதான் நமது ஜனநாயக அமைப்பு என்பதை அறிவோம். அதை வகுப்புவாதிகள் மீறுவதை, சட்டவிரோதம் என்கிறோம். நீதியை நிலைநாட்ட வேண்டிய நீதிபதியே மீறினால்? என்கிற கேள்வியை எழுப்பியுள்ளது உச்சநீதிமன்றம்.

கர்நாடக உயர்நீதிமன்றத்தில் நிலப்பிரச்சினை தொடர்பான வழக்கு ஒன்று, நீதிபதி ஸ்ரீஷானந்தா அமர்வில் விசாரணைக்கு வந்துள்ளது. அதை விசாரித்த நீதிபதி, வழக்கு வாதங்களின்போது, பெங்களூருவில் முஸ்லிம் மக்கள் பெருமளவில் வசிக்கும் கோரி பல்யா என்கிற பகுதியை பாகிஸ்தான் என குறிப்பிட்டுப் பேசியதுடன், அங்கு காவலர்கள் தாக்கப்படுவர் என்றும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான தகவல்கள் வெளியாகி சர்ச்சையான நிலையில், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான அமர்வு தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துள்ளது. “நீதிபதிகள் சொந்த கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வழிகாட்டுதல்களை வழங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது” எனவும் உச்சநீதிமன்றம் குட்டு வைத்துள்ளது.

அரசியலமைப்பு, பொறுப்பில் இருப்பவர்கள் மதவெறிச் சாய்வுடன் இயங்குவது இந்திய ஜனநாயகத்தின் ஆபத்து என்பதையே உச்சநீதிமன்றக் கருத்து சொல்கிறது. ஆபத்து களையப்பட வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு.

## ::ப்ளாஷ்பேக்



### நாஞ்சில் நாட்டுக்கு தளபதியின் வருகை!



சற்குரு கண்ணன்

1993-ஆம் ஆண்டு நாகர்கோவில், இராஜாக்கமங்களம் ஒன்றியத்திற்கு அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் இன்றைய கழகத் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்திருந்தார். அந்த ஒன்றியத்தின் இளைஞர் அணி அமைப்பாளராக நான் நியமிக்கப்பட்டதையொட்டி பொதுக் கூட்டம், கொடியேற்று விழா, அலுவலகத் திறப்பு விழா ஆகியவற்றை ஏற்பாடு செய்திருந்தேன். இம்மூன்று விழாவிலும் பங்கேற்றுச் சிறப்பித்த தளபதி அவர்களுக்கு சால்வை அணிவித்து, மரியாதை செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

**– சற்குரு கண்ணன், ஒன்றியச் செயலாளர், இராஜாக்கமங்களம் வடக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### கலைஞர் கைதும் கொந்தளிப்புகளும்…

1981-ஆம் ஆண்டு, இலங்கைத் தமிழர்களுக்காக கழகம் நடத்திய போராட்டங்களும், அதனைத் தொடர்ந்து கலைஞரும், கழகத்தினரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட நேரத்தில், கலைஞரை விடுதலை செய்யக் கோரி கோயிலடி பிருந்தாவன், திருச்சி மனோகரன், பெருந்துறை முத்துப்பாண்டியன், திருவாரூர் கிட்டு, சென்னை மேரி, கல்லாவி இராசேந்திரன், மேல்மாயில் ஜெகநாதன் ஆகிய ஏழு பேர் தீக்குளித்து உயிரிழந்தனர். மேலும் பலர் தீக்காயங்களுடன் உயிர் மீண்டனர்.

# திராவிடத்தால் வாழ்கிறோம்

**608**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131